# ஆய்த எழுத்து

## தமிழியல் ஆய்வு இதழ்

காலாண்டிதழ்

அக்டோபர் – 2015

AN INTERNATIONAL JOURNAL OF TAMIL STUDIES - ISSN: 2278-7550



visit us: www.pallavipathippakam.in | DOAJ DIRECTORY OF OPEN ACCESS JOURNALS Google scholar

# பொருளடக்கம்


1. அடியார்க்கு நல்லார் உரையில் வல்லார்

*– முனைவர் மு. அமிர்தகடேசுவரர்* 4

2. சங்க இலக்கியத்தில் வழிபாட்டு மரபுகள்

*– முனைவர். ம.சித்ரகலா* 10

3. ஜெயமோகனின் காடும் மனிதத் தேடலும்

*– முனைவர் ஆ.தேவதா* 14

4. எட்டுத்தொகைச் சுட்டும் இயற்கைப் பேரிடர் மேலாண்மை

*– பூ.தேவி* 16

5. சங்க இலக்கியம் – தலைவியின் பண்பாட்டு, நெறிமுறைகள்

*– முனைவர் ந.பரமேஸ்வரி* 20

6. அகத்திணைப் பாடல்களில் உள்ளுறை

*– முனைவர் தே.ஞானசேகரன்* 22

7. பெண்ணியச் சிந்தனைகளில் பாவேந்தரின் பங்களிப்பு

*– முனைவர் அ.கோவிந்தராஜன்* 24

8. ஜெயகாந்தன் புதினங்களில் வாழ்வியல் சிக்கல்களும், தீர்வுகளும்

*– வீ.கமலவேணி* 28

9. பூங்கொடி காப்பியத்தில் கவியரசு முடியரசனின் மொழியுணர்வு

*– கு.கண்ணன்* 32

10. கிறித்துவ புதுக்கவிதைகள் காட்டும் விழுமியங்களும், சமூகக் கோட்பாடுகளும்

*– Dr. லதா* 35

11. திருமந்திரத்தில் உயிர் தத்துவங்கள்

*– வீ.மகேஸ்வரி* 37

12. பெரியாரின் பெண்கல்வி

*– வி. மீனாட்சி* 39

13. சங்க இலக்கியத்தில் விழாக்கள்

*– இரா.ரம்யா* 43

14. தமிழ்மாமணி. துரை. மாலிறையனின் அருள்ஒளி அன்னை தெரசா காவியம் – ஓர் அறிமுகம்

*– முனைவர். சகோதரி பி.ரெஜினா* 46

15. ஜே.எம்.சாலியின் சிறுகதைகளில் தகவல் விகுதி நடை

*– வ.முகம்மது யூனுஸ்* 49

# சங்க இலக்கியத்தில் வழிபாட்டு மரபுகள்

முனைவர் ம. சித்ரகலா,
*உதவிப் பேராசிரியர்,*
*என்.ஜி.எம் கல்லூரி,*
*பொள்ளாச்சி.*
*chitrababu1996@gmail.com*

ஆதி மனிதன் இயற்கைச் சீற்றங்களுக்கு அஞ்சினான். தனக்கு மீறிய ஒரு சக்தி உண்டு என நம்பினான். மரம், விலங்கு ஊர்வன போன்றவற்றைக் கடவுளின் தோற்றமாகக்கருதி வழிபடத் தொடங்கினான். இதன் அடிப்படையிலேயே சேர, சோழ, பாண்டியர்கள் முறையே வில், புலி, மீன் போன்றவற்றைத் தனது கொடியாகக் கொண்டு போற்றினர். முந்தைய காலகட்டத்தில் அதாவது சங்க காலத்திற்கு முன்பே இறந்தோரை வழிபடுதலும் முன்னோரை வழிபடுதலும் வழக்கமாக இருந்தது.

சங்க காலத்தில் வழிபாட்டு முறை பற்றியும் அக்காலகட்டத்தில் சமயப்பூசல்கள் இருந்தனவா என்பதை ஆராய முற்படும்போது **"சங்க காலத்தில் மூவகை சமய மரபுகள் விரவிருந்தன. 1. தமிழரது சுதேசிக் கடவுளரும், வழிபாட்டு முறையும், 2. வேற்றிடங்களிலிருந்து வந்த கடவுட் கொள்ளைகள், வழிபாட்டு முறைகள் 3. வேற்றிடமிருந்து புகுந்த இந்து சமயத்திற்குப் புறம்பான சமயக் கருத்துக்கள் மரபுகள் என்பவை இவையெல்லாம் ஒருங்கே அச்சமயத்தில் காணப்பட்டன."**

இப்படி சமயங்கள் இருப்பினும் ஒவ்வொரு சமயத்தாலும் பிற சமயத்தையோ தெய்வத்தை ஒடுக்கவோ பூசல் ஏற்படுத்தலோ முற்பட வில்லை. ஆட்சி செய்த மன்னர்களும் பிற சமயத்தை ஒடுக்க முற்பட வில்லை. இந்நிலை நோக்குங்கால் சங்க கால மக்கள் பிறர் நோக தான் வாழும் நிலையற்றவர்களாக இருந்தார்கள் என்பதோடு சமயத்தை போற்றியவர்களாகவும், விழாக்கள் கொண்டாடுபவர்களாகவும் இருந்தனர். மேலும் அவர்கள் கடவுளை அருவப்பொருளாகக் கொண்டு வழிபட்டனரா? எந்த எந்த கடவுளை வழிபட்டனர் இறந்தோரை வழிபடுதலோ நடுக்கல் வழிபாடோ இருந்ததா? பெண் தெய்வ வழிபாடுகள் இருந்தனவா? என்பன பற்றிய கருத்துக்களை ஆராய்வதே கட்டுரையின் நோக்கமாகும்.

### *வழிபடும் இடம் :*

இறைவனை வழிபடும் இடத்திற்குக் கோயில் என்று பெயர். கோ - அரசன் இல் - இல்லம். சங்க காலத்தில் அரசன் தெய்வமாகக் கருதப் பட்டான். கோயில் அரசன் வாழும் இடமாகக் கருதப்பட்டது. காலப்போக்கில் கோ + இல் உலகை ஆளும் அரசனான கடவுளின் இல்லமாகக் கருதப்பட்டது. ஆலயம் 'ஆ' என்பது ஆன்மா எனவும், 'லயம்' லயிக்கின்ற இடம் என்றும் கூறுவர். மேலும் இதனை 'ஆ' என்பது ஆணவம் என்றும் 'லயம்' என்பது அடக்குதல் என்றும் கொண்டு ஆணவத்தை அடக்கும் இடம் என்றும் பொருள் கொள்ளலாம். ஆக உள்ளத்தின்கண் ஒழுகும் தீய குணத்தை அழித்து நல்வழிப்படுத்தவும், மனநிம்மதி பெறவும், மக்கள் அனைவரும் தனக்கு மீறிய ஒரு சக்தியின்பால் ஈர்த்து ஒன்றுபட்டு வாழவும், வழிவகை செய்யும் இடம் கோயில் எனலாம்.

### *பெண் தெய்வ வழிபாடு:*

மக்கள் ஒன்றிணைந்து வாழத் தொடங்கிய போது சமூகமும், வழிபாடுகளும் தோன்றியதோடு தாய் தெய்வ வழிபாடும் தோன்றி தலைமைப் பண்பைப் பெற்றுள்ளது என்பதை அறியலாம். வேளாளர் தொழில்

பெண்களின் கண்டுபிடிப்பு. அதன் காரணமாகவே பெண்கள் வழிபாட்டு நிலையைப் பெற்றனர் என்பர் சிலர். மேலும் சிந்து சமவெளியில் கிடைத்த முத்திரை வடிவத்தையும் குப்தர் காலச் சுடுமண் வடிவம் ஒன்றையும் இதற்கானச் சான்றுகளாக அவர்கள் முன் வைக்கின்றனர்.

இந்த முத்திரையில் பெண்ணொருவரின் பிறப்புறுப்பிலிருந்து செடியொன்று முளைத்து வருவதாகக் காட்டப்பட்டுள்ளது. சுடுமண் வடிவத்தில் பெண்ணின் கழுத்திலிருந்து தாமரை முளைத்துள்ளது. இதன் அடிப்படையில் நோக்குங்கால் பெண் கருவுற்று பிள்ளைப்பேறு பெற்றுத்தரும் தாய்மை நிலையே தெய்வீகம் என உணர்ந்தனர் எனலாம். தமிழரின் நாகரிகமாக விளங்கும் சிந்து சமவெளியில் தாய்த் தெய்வமாகக் கருதப்படும் சுடுமண் வடிவங்கள் பலவாகக் கிடைத்துள்ளன." இவ்வாறு தாய்த்தெய்வ வழிபாடே பிற்காலத்தில் பெண் தெய்வ வழிபாடாக தோற்றம் பெற்றிருக்கலாம்.

பழங்காலத்தில் போருக்கு செல்லும் வீரர்கள் கொற்றவையாகிய பெண் தெய்வத்தை வழிபட்டனர் என்ற குறிப்பு நமக்கு கிடைத்த முதலும் முழுமையான நூலுமான தொல்காப்பியத்திலேயே காணப்படுகின்றது. சங்க இலக்கியத்திலும் கொற்றவை வழிபாடு இடம் பெற்றுள்ளனவே தவிர கொற்றவை தெய்வத்தின் வடிவ அமைப்புகள் பற்றிய செய்திகள் குறிப்பிடப்படவில்லை. எனினும் கொற்றவை தெய்வத்திற்கு வடிவம் இருந்தது என்பதைக் "கொற்றவை கோலம் கொண்டோர் பெண்" (பரி. 11: 100) என்ற பரிபாடல் வரியால் உணரலாம். மேலும் சங்க இலக்கியத்தில் கொற்றவை போர் தெய்வமாகக் கருதப்பட்டதை "வெற்றிவெல் போர் கொற்றவை" (பா. என்று கொண்டாடப்படுகின்றது.

முருகனின் தாயாகவும் "கொற்றவை சிறுவ" "பழையயோர் குழவி" என்றும் குறிப்பிடப்படுகின்றது. மற்றொரிடத்தில் "மலைமகள் மகனே" என்றும் விளிக்கின்றது. மேலும் கலித்தொகை, பரிபாடல், திருமுருகாற்றுப்படை ஆகிய மூன்று நூல்களும் உமையம்மையை சிவபெருமானின் மனைவியாக அறிமுகப்படுத்துகின்றன. ஓரிடத்தில் முருகனின் தாயாக கொற்றவையும், மற்றோரிடத்தில் மலைமகளாக உமையம்மையின் மகனாக முருகனையும் வைத்திருக்கும் அமைப்புமுறையை நோக்குங்கால் இருவரும் ஒருவரே என்பதுவும் போரின் போது அத்தெய்வத்தையே கொற்றவையாகக் கொண்டாடினர் என்பதுவும் ஆய்ந்துணரத்தக்கது.

***நில அடிப்படையில் வழிபாடு :***

சங்க கால மக்கள் நிலங்களை ஐவகையாக பிரித்தும் ஒவ்வொரு நிலத்திற்கும் ஒரு கடவுளரைத் தெய்வமாகக் கொண்டும் வழிபட்டு வாழ்ந்தனர். இதனை

**"மாயோன் மேய காடுறை உலகமும்**
**சேயோன் மேய மைவரை உலகமும்**
**வேந்தன் மேய தீம்புனல் உலகமும்**
**வருணன் மேய பெருமணல் உலகமும்"**

(தொ. பொரு. அகத். நூ. 5)

எனத் தொல்காப்பியம் குறிப்பிடுகிறது. முல்லை நிலத்தின் காடுரை தெய்வமான திருமாலின் சிறப்புக்கள் சங்க இலக்கியங்களில் பரவலாகக் காணப்படுகின்றன. பரிபாடலில் 1, 2, 3, 4, 13, 15 ஆகிய பாடல்களில் திருமாலின் வழிபாடு பற்றிய செய்திகள் சிறப்பாக இடம்பெற்றுள்ளன. மேலும் திருமுருகாற்றுப்படையில்

**"கருவொரு ஒடுங்கிய தூம்புடை வால் எயிற்று**
**அழல் என உயிர்க்கும் அஞ்சு வரு கடுந்திறல்**
**பாம்பு படப் புடைக்கும் பல பரிக் கொடுஞ் சிறைப்**
**புள் அணி நீள் கொடிச் செல்வனும்"**

(திருமுரு. 148 -151)

என திருமால் பாம்புடனும் கருடக் கொடியுடனும் இருப்பதைப் பாடல் வரி உணர்த்தி நிற்கின்றது. சிலப்பதிகாரத்தில் திருமாலின் மேனியின் நிறத்தையும் திருமாலுக்கு கோயில் அமைக்கப்பட்டிருப்பதையும்,

**"நீலமேனி நெடியோன் கோயிலும்"**

(சிலம். 4. 141 – 146) என்ற வரி விளக்குகின்றது. இவ்விலக்கியங்களின்வழி காலந்தோறும் திருமால் வழிபாட்டுக்குரியவராக காணப்படுவது புலனாகின்றது.

குன்று இருக்கும் இடமெல்லாம் குமரன் இருக்கும் இடமாக இன்றும் மக்கள் போற்றுவதற்குக் காரணம் சங்க இலக்கியத்தில் குறிஞ்சி நிலக்கடவுளான முருகன் மலையில் இருப்பதாலோ என்னவோ? முருகன் தமிழ்க்கடவுளாகப் போற்றப்படும் சிறப்பிற்கு உரியவர். முருகனின் பெருமைகள் குறித்தும், ஆறுபடை வீடு, ஆறுமுகங்கள், பன்னிருக்கைகள், சூரபத்பனை அழித்த பெருமை ஆகியவை குறித்து திருமுருகாற்றுப்படை விரிவாக எடுத்தியம்புகின்றது.

பரிபாடல் முருகனை மறை, ஒலி, பூ, தூப தீபம் ஏற்றி வழிபடும் முறையை பரி. பா. 51 – 56) வரிகளும் கடம்ப மரத்தில் உறையும் முருகப்பெருமானை சுற்றத்தாருடன் வழிபட்டதை (பரி. பா. 104 – 105) வரி களும் விளக்கி நிற்கின்றன. குறிஞ்சிப் பாட்டு குறவர் இனமக்களின் அகவாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுவதோடு அம்மக்களின் குலதெய்வ மான முருகக் கடவுளின் சிறப்புக்களை ஆங்காங்கே எடுத்தியம்புகின் றது. இதில் குறிஞ்சி நிலத்தலைவனின் தோறப்பொலிவு முருகப் பெருமானுடன் ஒப்பிட்டும் பேசப்பட்டுள்ளதை (குறி. பா.107 – 116) விளக்கி நிற்கின்றது.

மருத நில கடவுளான இந்திர வழிபாடு பழங்காலம் முதற்கொண்டே இருந்து வருகின்றது.

**நூற்றுப் பத்து அடுக்கிய நாட்டத்து நூறுபல**
**வேள்வி முற்றிய வென்று டு கொற்றத்து**
**ஈர் இரடு ஏந்திய மருப்பின் எழில் நடைத்**
**தாழ் பெருந் தடக்கை உயர்த்த யானை**
**வருத்தம் ஏறிய திருக்கிளர் செல்வனும்"**

(குறி. 155 – 159)

குறிப்பிடுகின்றது. சிலப்பதிகாரத்தில் இந்திரவிழா ஊரெடுத்த காதை இந்திரனுக்கு விழா கொண்டாடியதை எடுத்தியம்புகின்றது.

நெய்தல் நிலக்கடவுளான வருணன் வழிபாடு குறித்து சங்க இலக்கிய நூலான பட்டினப்பாலையில் செய்திகள் இடம்பெற்றுள்ளன. தொல்காப்பியத்திலும் வருண வழிபாடு பற்றிய செய்திகள் இடம்பெற்றுள்ளன. பாலை நிலக்கடவுளான கொற்றவை போர்தெய்வமாகக் கருதப்பட்டு வருவதைச் சங்க இலக்கியங்கள் சான்று கூறுகின்றன.

***நடுகல் வழிபாடு :***

நடுகல் இடும் வழக்கம் தமிழகம் மட்டுமல்லாமல் இந்தியா முழுவதும் பரவியிருந்துள்ளது. நடுகல் நடுதலை "தமிழில் - நடுகல், கன்னடத்தில் - வீரகலு, தெலுங்கு – வீரகிலாலு, மேற்கிந்தியா – பலியா, கம்பியா (Pillans) சிர – (Grave stone) மத்திய இந்தியா உரஸ்கல், வட இந்தியா – கொல்லா, பொயா, வீரக என்று எல்லா இந்திய மொழிகளிலும், சிலைக்கல் என்ற தமிழ்சொல்லோடு தொடர்புடைய சொற்களே அமைந் திருப்பது காணலாம். நடுகற்களும் விலங்குகளுடன் போரிட்டு இறந்த வனுக்கு எடுக்கப்பட்ட நினைவு கற்களே இந்தியாவில் தொன்மை வாய்ந்தவை. விலங்கு களுடன் போரிடும் வீரர் உருவங்கள் தென்னிந்தியாவில் மட்டுமின்றி வடஇந்தியக் குகைகளிலும் உள்ளன."

(ச. கிருஷ்ணமூர்த்தி – நடுகற்கள், என்னுரை) பண்டைத் தமிழர்கள் போரில் இறந்த வீரர்களுக்குக் கல் நட்டு வணங்கிய செய்தியை,

**"காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்**

**சீர்த்தகு மரபின் பெரும்படை வாழ்த்தல்" (தொல்.** பொருள். புறத். 63) எனத் தொல்காப்பிய வரிகள் சுட்டி நிற்கின்றன. சங்க காலத்தில் நடுகல் நடும் வழக்கமும் அதனை வணங்கும் வழக்கமும் இருந்து வந்தது. சங்க காலத்தில் மக்களின் நலன் கருதி போரில் மாண்டு போனவர்களுக்காக நடுகல் எடுக்கப்பட்டு வழிபடப்பட்டது.

மேலும் நன்றாக வாழ்ந்து மாண்டவர்களுக்கு ஈமக்குழி, கற்களினாலேயே அறைகளுடன் கூடிய வீடு போன்று பதுக்கைகள் செய்து அதனுள் உடலையிட்டுக் கற்பலகை கொண்டு மூடுவதும், அதனை வழிபடுவதும் நடந்தது. வடக்கிருந்து உயிர் விட்டவருக்கு வழிபாடு நடத்தியதாகக் குறிப்புகள் ஏதும் கிடைக்கவில்லை.

வீரக்கல்லிற்குரிய வீரர்களை "கடவுள்" என்ற பெயரால் சங்க இலக்கியப் பாடல்கள் சுட்டுகின்றன (அகம். 35, புறம். 335, மலைபடு. 395,396) வீரக்கல்லை பூசை பொருள் கொண்டு வழிபடுதல் (புறம். 329, அகம். 289), வீரக்கற்கு நீராட்டுதல் (புறம் 329), வீரன் உருவத்திற்கு மஞ்சள் பூசினர் (அகம். 269), மலர்கள் சூட்டு வழிபடுதல் (அகம். 289, அகம். 269, புறம் 264) மாலை சூட்டுதல் (புறம். 265) பீலி சூட்டுதல் (அகம். 35, 61, 131, புறம். 232, 260, 264), வீரகல்லின்முன் கள்ளை வைத்து வழிபடுதல் (அகம். 35, புறம் 232) செம்மறியாட்டை பலிகொடுத்தல் (அகம். 35) துடியடித்து ஒலி எழுப்புதல் (அகம். 35), நெய்யூற்றி விளக்கேற்றி வழிபடுதல் (புறம். 329), நறுமணப்புகை போடுதல் (புறம். 329), வீரக்கல்லிற்கு புடவையால் பந்தரமைத்தல் (புறம். 260) இவ்வாறு சங்க கால மக்கள் வீரக்கல்லை வழிபாடு செய்தனர் என்பதை அறிய முடிகின்றது. இந்நிலையில் தொடர்ச்சியாகவே இறந்தோரை வழிபடும் வழக்கம் ஏற்பட்டிருக்கலாம்.

***மரங்கள் வழிபாடு :***

மரங்களை வழிபடும் வழக்கம் பண்டைக் காலத்திலிருந்தே இருந்தது. சங்க காலத்தில் மக்கள் மரங்களை வழிபட்டதையும் மரங்களில் தெய்வம் உறைந்திருப்பதையும்,

**"தெய்வம் சேர்ந்த பரா அரை வேம்பில்**
**கொழுப்பு ஆ எறிந்து குருதி தூஉய்**
**புலவு புழுக்கு உண்டான் கண் அகல் அறை"**

(அகம். 309)

இப்பாடல் எடுத்தியம்புகின்றது. தெய்வ மரங்களாக,

**"சூர் முதல் இருந்த ஓமை அம்புறவின்**
**மதி சூழ் மீனின் தாய் வழிப்படூஉம்**

(அகம். 297, 11 – 15),

என்ற ஓமை மரத்தை வழிபட்டதையும், பனை (நற். 303 – 304), வேம்பு (அகம். 309. 4 – 6), வேங்கை (நற். 216. 6 – 7) ஆகிய மரங்களில் கடவுள் உறைவதாகவும், போரில் வெற்றி தரக்கூடிய மரமாக வாகை மரத்தையும், அதில் உறையும் கடவுளாகக் கொற்றவையைத் தெய்வமாகக் கொண்டு வழிபட்டனர்.

மேலும் மரங்களை வழிபாடு செய்யும் வழக்கம் பரவலாக இருந்தன என்பதனை "மரங்களை வழிபடும் வழக்கம் (Tree worship) ஒரு காலத்தில் கிரீஸ் (Greece), பிரான்ஸ் (Rrance) போலந்து (Poland) முதலிய நாடுகளில் நிலவியிருந்ததென அறிஞர் கூறுவர்.

ஆப்ரிக்காவிலும் அமெரிக்காவிலும் பழங்குடி மக்களிடையே மரத்தை வழிபடும் நிலை இன்றும் நிலவு கிறது. ஆசியாக் கண்டத்திலுள்ள மக்கள் சில மரங்களுக்கு இயற்கையிலேயே இறை ஆற்றல் உண்டென நம்புகின்றனர்." மனிதன் முதலில் மரங்களை இறையாகவே வழிபட்டான். பின் மரத்தில் இறைவன் குடிகொண்டுள்ளான் என்று வணங்கினான்.

நாளடைவில் இறைவனையே மரத்தடியில் அமர்த்தி வழிபடும் நிலை ஏற்பட்டு மரத்திற்கு அடியில் இருக்கும் இறைவனுக்கு வேண்டிய பொருள்களை வைத்தும் படையல் போட்டும் வழிபாடுகள் நடந்தது. காலப்போக்கில் மரத்தைச் சுற்றி வழிபாடு செய்தலும், தன் வேண்டுதல்களை மரத்தில் கட்டி விட்டு வேண்டிக் கொள்வதும் நடந்தது.

திருமணம் ஆகாதவர்கள் மஞ்சள் கயிறு, பிள்ளைப்பேறு இல்லாதவர்கள் தொட்டில், வளையல் போன்றவைகளை மரத்தில் கட்டிவிட்டும் வழிபாடு செய்தனர். நோய்வாய்ப்பட்டவர் உருவ பொம்மைகளை மரத்தின் அடியில் வைத்தும் வழிபாடுகள் செய்யபட்டு வருகின்றது. பண்டைகால வழிபாடு இன்று வழக்கமாகியது போலும்.

***இயற்கை வழிபாடு :***

பழந்தமிழர் இயற்கையில் ஆற்றலை கண்டு வியந்தும், அஞ்சியும், வழிபாடு செய்தும் வாழ்ந்தனர். தொல்காப்பியர் ஞாயிறு, திங்கள், தீச்சுடர் ஆகிய

இயற்கையின் முக்கூறுகளை வழிபட்டமையினைப் பாடாண்திணையில்,

**"கொடி நிலை கந்தழிவள்ளி என்ற**
**வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்**
**கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வடுமே"**

(தொ. பொ. 85)

எடுத்தியம்புகின்றார். சங்க காலத் தமிழ் மக்கள் ஞாயிற்றினைப் "பகல்கெழு செல்வன்" "பருதியஞ் செல்வன் என்று கூறியதை,

**"குணகடல் இவர்ந்து குரு உக்கதிர் பரப்பிப்**
**பகல்கெழு செல்வன் குடமலை மறையப்**
**புலம்பு வந் திறுத்த புன்கண் மாலை** (நற்: 2:5, 1.3)
**"பகல் செய் பல்கதிர்ப் பருதியஞ் செல்வன்"**

(அகம்.229: 1)

சுட்டலாம். பரதவப் பெண்டிர் கடலை வணங்கி யதை (அகம். 201: 4 – 1) குறிஞ்சி மகளிர் மலையை வணங்கிய செய்தியை "கொடிச்சியர் கூப்பி வரை தொடு கைபோல் (கலி. 40: 11) என்ற அடியும் விளக்கி நிற்கின்றன. பின் வந்த இலக்கியமான சிலப்பதிகாரத்தில் இளங்கோவடிகள் மங்கல வாழ்த்து காதையில் திங்கள், ஞாயிறு, மாமழை ஆகியவற்றைப் போற்றிக் காதையைத் தொடங்குகிறார். ஆக பழந்தமிழர் இயற்கையை வழிபட்டனர் என்றும், அவ்வழிபாடுகள் பின்னாளிலும் நடந்து கொண்டிருப்பதையும் அறிய முடிகின்றது.

***பிற வழிபாடுகள :***

சங்க கால மக்கள் அவரவர் விருப்பம் போல் தெய்வத்தை வழிபட்டதோடு தெய்வத்தை நேராக கண்டதாக

**"அழிவு இல முயலும் ஆர்வ மாக்கள்**
**வடுபடு தெய்வம் கண்கண்டா அங்கு"** (நற். 9)

என்றும் நற்றிணைப் பாடல் வழி அறியமுடிகின்றது. மேலும் இல்லில் தெய்வம் ஏற்றி வழிபட்ட நிலையினை நெடுநல்வாடை,

**"நெல்லு மலருந் தூஉய்க்கை தொழுது**
**மல்ல லாவண மாலை யயர"** (நெடு. 43 – 44)

எனக் குறிப்பிடுகின்றது. மேலும் அணங்கு, தூக்கணங்கு, பாவை யாவும் வழிபடு தெய்வமாகக் கருதப்பட்டது. தெய்வம் வேண்டியதைக் கொடுக்கும் என்ற நம்பிக்கையும் இவர்களிடம் இருந்ததை,

**"அமர்கண் ஆமான் அருநிறம் முள்காது**
**பணைத்த பகழிப் போக்கு நினைந்து"**

(நற்.165: 1 – 5)

பாடல் வரி சுட்டி நிற்கின்றது. கடவுளைப் பேணிய தால் பிள்ளைப்பேறு கிடைக்கும் (ஐங். 257: 1– 2) என்றும், தீயவரை கடவுள் ஒடுக்குவார் (குறு 87: 1– 3) என்றும், ஆபத்து காலங்களில் வழிபட்டவரைத் தெய்வம் காக்கும் (நற். 9: 1 – 3) என்றும் நம்பிக்கை கொண்டு வழிபாடு செய்தனர். மேலும் முழு முதற் கடவுளாகக் கருதப்படும் சிவபெருமானின் வழிபாடு சங்க காலத்தில் சிறப்பாக இடம் பெற்றிருப்பதை பரிபாடல்

**"ஐந்தலை உயிரிய அணங்குகுடை அருந்திறல்**
**மைந்துடை ஒருவனுக்கு மடங்கலும் நீ"**

என்ற வரிகளும், பிரம்மதேவன் வழிபாடு இருந்ததைக் கலித்தொகையும் திருமுருகாற்றுப்படையும் எடுத்தியம்புகின்றன. அதோடு சுனை, குளம், ஆறு, ஆற்றுத்துருத்தி, கடல், கழிமுகம் என்பனவற்றில் தெய்வம் உறைவதாகச் சங்கப்பாடல்கள் கூறுகின்றன.

**"உண் துறை அணங்கிவள் உறை நோய் ஆயின்**
**தண்சோறு கள்வன் வரிக்கும் ஊரற்கு**
**நண்டொடி நெகிழச்சா அய்**
**மென்தோள் பசப்பது எவன்கொல்? அன்னாய்"**

(ஐங் 28)

நீரில் உறையும் அணங்குதான் தலைவியின் நோய்க்குக் காரணம் என்று தோழி உரைப்பதாக இப்பாடல் அமைந்துள்ளதன்மூலம் நீர் நிலைகளில் தெய்வம் உறைந்திருப்பதை அறியமுடிகின்றது. ஆறு கடலோடு கலக்கும் கழிமுகத்திலும் தெய்வம் உறைந் திருப்பதை, "நல் யாற்று நடுவும் (பரி. 4: 67) "கவின் பெறு துருத்தியும்" (முருகு. 223)

என்ற அடிகளும், கடலில் தெய்வம் இருப்பதை, "பெருங்கடல் தெய்வம் நீர் நோக்கித் தெளித்துன்" (கலி. 131) என்ற அடிகளும் விளக்கி நிற்கின்றன.

இவ்வாறு சங்க மக்கள் இயற்கையோடு இயைந்த வாழ்க்கை வாழ்ந்ததோடு இயற்கையை வழிபட்டும் தன் மனதிற்கு ஏற்ப வழிபாடுகள் நடத்தியும் இன்பமாக வாழ்ந்தனர். அவர்கள் சமயத்தை வலிந்து திணிக்க வில்லை என்பதும், அவரவர் விரும்பம்போல் வழிபாடு செய்தனர் என்பதும், பெருந்தெய்வ வழிபாட்டோடு சிறுதெய்வ வழிபாட்டையும் செய்தனர் என்பதோடு பலியிடுதலில் நம்பிக்கை வைத்திருந்தனர் என்பதும் புலனாகின்றது.

***துணை நூற்பட்டியல*** :


1. எட்டுத்தொகை
2. பத்துப்பாட்டு
3. சங்க இலக்கியத்தில் பெண்மறுப்பு
4. பெண் தெய்வ வழிபாடு
5. தென்னிந்திய வீரக்கற்கள்
6. தமிழர் பழக்கவழக்கங்களும் நம்பிக்கைகளும்
7. ஆய்வுக் கோவை 2014.
8. சங்க கால வாழ்வியல்
9. நடுகற்கள்